13.10.2023

**SC No**. 581 / 2018 **PW**. 7. பாரி

<u>எதிரிகள்1,2 ஆஜர். எதிரிகள் 3 முதல் 6 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.</u>

**Crl.MP.No. 1442/2023 நாள் 27.09.2023 உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எங்கள் வீடும், சிவப்பிரியாவின் அம்மா வீடும் பக்கத்து பக்கத்து தோட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும் அவர்கள் வீட்டிற்கும் இடையே சுமார் 300 மீட்டர் தூரம் இருக்கும். நாங்கள் சிவப்பிரியாவிற்கு உறவினர்கள் இல்லை. சிவப்பிரியாவின் வீட்டில் நடக்கும் அனைத்து நல்லது கேட்டத்திற்கும் எங்களுக்கு அழைப்பு விடுப்பார்கள். எங்கள் சமூதாயத்தில் எங்கள் தகுதிக்கு ஏற்ப நகை சீர் வரிசைகள் செய்து போடுவது வழக்கம். அவ்வாறு போடவில்லை என்றால் எங்கள் சமூதாயத்தில் அசிங்கமாகப் பேசுவார்கள் என்பதால் நான் இவ்வளவு நகை போட்டேன் என்று சொல்வது வழக்கம் என்றால் சரிதான். எங்கள் சமூதாயத்தில் வட்டிக்கு கொடுத்து வாங்கும் பழக்கம் பேரும்வாரியாக உள்ளது என்றால் ஒருசிலபேர் அவ்வாறு செய்கிறார்கள். நகையைக் கொடு என்றும், நாம் நகையை அடகு வைத்து வட்டிக்குக் கொடுக்கலாம் என்று சொன்னது தவிர வேறு ஏதுவும் பிரச்சனைகள் அவர்களுக்குள் இல்லை என்றால் சரிதான். சிவப்பிரியா இறந்துபோன சம்பவம் எனக்கு காலை 10.30 மணிக்குத் தெரியும். அப்போது நான் எங்கள் தோட்டத்தில் இருந்தேன். 1 வது எதிரியின் தோட்டத்து வீடு எங்கள் தோட்டத்தில் இருந்து சுமார் 15 கிமீ தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். RDO அம்மா வந்தபோது நான் அந்த இடத்தில் இல்லை. சிவப்பிரியா இறந்துபோன அன்றே அவர்கள் வீட்டில் பஞ்சாயத்து பேசி, சிவப்பிரியாவின் நகைகள் அனைத்தையும் அவரது

பெற்றோர் வாங்கிக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் போட்டோவில் கைலிகட்டி உட்கார்ந்துள்ளேன் என்றால் சரிதான். **அந்த புகைப்படம் எதசாஆ.1 ஆகும் (அரசு தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**. அதில் பட்டிகை கல்லின் மீது ஒரு துணியிலும், ஒரு பெட்டியிலும் நகைகள் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நகைகள் சிவப்பிரியா இறந்த அன்றே சிவப்பிரியாவின் பெற்றோரிடம் நாங்கள் பஞ்சாயத்து பேசி ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல. எந்த தேதியில் புகைப்படத்தில் கண்டவாறு நகைகள் ஒப்படைக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஜெயபிரகாஷ் என்பவர் சிவப்பிரியாவின் பெரியப்பா மகன் ஆவார். நான், ஜெயபிரகாஷ் மற்றும் எங்கள் S பெருமாள்கோவில்பட்டியில் இருந்து வந்த பெரியவர்கள் எல்லாம் சிவப்பிரியாவின் உடல் இருக்கும்போதே நகைகள் எல்லாம் பெற்றுக்கொண்டபின்னர் நாங்கள் தான் அடக்கம் செய்தோம் என்றால் சரியல்ல. அதனால் தான் RDO அம்மா வந்தபோது நான் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசுக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. தற்கொலை செய்து கொண்டால் காவல்துறைக்கு தெரியப்படுத்தி, பிரேதபரிசோதனை செய்து அலங்கோலப்படுத்திவிடுவார்கள் என்று S பெருமாள்பட்டியைச் சேர்ந்த நாங்கள் எல்லோரும் பேசி நகையைப் பெற்றுக்கொண்டு சிவப்பிரியாவின் உடலை எரித்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. சிவப்பிரியவிற்கு ஒரு சகோதரியும், ஒரு சகோதரனும் உள்ளார்கள். சிவப்பிரியா தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பாக அவரது சகோதரனும், சகோதரியும் தனித்தனியாக விஷம் அருந்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விபரம் பற்றி எனக்குத் தெரியாது. சிவப்பிரியாவின் குடும்பத்தில் உள்ள எல்லாருக்கும் சிறிய விஷயத்திற்கு கூட தற்கொலை செய்துகொள்ளப்போவதாக சொல்லி மிரட்டுவது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. சிவப்பிரியாவின் சகாதரன்

செக்காணூரணி மருத்துவமனையிலும், சகோதரிக்கு மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் 10 நாட்களுக்கு மேல் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளித்தார்கள் என்ற விபரம் பற்றி எனக்குத் தெரியாது. சிவப்பிரியாவின் சகோதரன், சகோதரி விஷம் அருந்திய விஷயம் எனக்கு எப்படி தெரியாதோ அதே போல் சிவப்பிரியாவிற்கும் தற்கொலை செய்யும் எண்ணம் இருந்து வந்தது பற்றி எனக்குத் தெரிய வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒருவரின் வீட்டிற்குள் நடக்கும் எல்லா விஷயங்களும் எனக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சிவப்பிரியா இறந்துபோனபோது, அவரது உறவினர்கள் அனைவரும், சிவப்பிரியாவின் வீட்டில் இன்னொரு பெண் கல்யாணம் ஆகாமல் உள்ளார் என்றும் தற்கொலை செய்து கொள்வது அவர்கள் குடும்பத்திற்குள் வழக்கமாக உள்ளது என்றும் அதனால் காதும் காதும் வைத்தது போல் இதை முடித்துவிடவேண்டும் என்று S பெருமாள்பட்டியைச் சேர்ந்த நாங்கள் அனைவரும் பேசி நகையைப் பெற்றுக்கொண்டு சிவப்பிரியாவின் உடலை எரித்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே சிவப்பிரியாவின் நகைளை அடகு வைக்க கேட்டதால் அந்த நகைகள் 1 வது எதிரியின் கைவசம் இருக்காது என்று தான் நகைகளைக் கேட்டோம் என்றும் ஆனால் அவர்கள் எந்த தவறும் செய்யாததால் உடனடியாக நகைகளை எடுத்து எங்கள் முன்பு ஒப்படைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதன்பின்பு பெருமாள்பட்டியில் உள்ள உறவினர்கள் அனைவரும் சேர்ந்து உண்மை தெரிந்த பிறகு, சிவப்பிரியாவின் உடலை எரித்தோம் என்றும் அதற்கு 1 வது எதிரியோ அவரது குடும்பத்தினரோ தொடர்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. RDO அம்மா வந்த விபரத்தை நான் கேள்விப்பட்டேன் என்றால் அது பற்றி சரியாக ஞாபகம் இல்லை. RDO அம்மா வந்தது எனக்குத் தெரியும் என்றும் பிரச்சனையில் இருந்து என்னையும் என் ஊரைச் சார்ந்தவர்களையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அந்த இடத்தில் இருந்து அகன்று சென்றுவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. சிவப்பிரியா தூக்குப்போட்டு

தற்கொலை செய்து கொண்டார் என்று நான் தெரிந்துகொண்டேன். அந்த தகவல் 1 வது எதிரிக்கு யார் சொல்லி எப்போது அவர் தெரிந்து கொண்டார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. அதனால் மரணச் செய்தி கேள்விப்பட்டு, உடலை எரிக்க உடந்தையாக இருந்துவிட்டு அதை மறைக்க தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவப்பிரியாவின் மரணத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் வரதட்சணை கேட்டோ அல்லது வேறு தொந்தரவு கொடுத்தோ சிவப்பிரியா தற்கொலை செய்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்துறைக்கு தகவல் கொடுத்துவிடுவோம் என்ற 1 வது எதிரியின் கருத்திற்கு எதிராக எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள் தான் சிவப்பிரியாவின் உடலை எரித்தோம் என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக ஒரு உடலை எரிப்பது என்றால் அங்கு மரணச் செய்தி கேட்டு வந்த அனைவரும் சேர்ந்து உடலை எரிப்போம் அல்லது பிரச்சனை நடத்தி உடலை எரிக்காமல் தடுத்து நிறுத்துவோம் என்றால் சரிதான். சிவப்பிரியாவின் உடலை எரித்தது நாங்கள் தான் என்றும் அதை மறைப்பதற்காகத்தான் எதிரிகள் மீது தவறாக வழக்கு கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை